# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 215 /பேரூ/2024**
**நாள் : 09.12.2024**

திரு. G. வெங்கடேஷ்,
கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம். – மனுதாரர்

செயல் அலுவலர்,
வடக்கனந்தல் பேரூராட்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம். – எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், L.F. ரோடு, எண். 233 என்ற முகவரியை சேர்ந்த திரு. G. வெங்கடேஷ், என்பவரது 04.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.10.2024 அன்று பெறப்பட்டு, 215/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், L.F. ரோடு, எண். 233 என்ற முகவரியை சேர்ந்த திரு. G. வெங்கடேஷ், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் வட்டம் கச்சிராயப்பாளையம் கிராம நத்தம் சர்வே எண்.238/1B தொடர்பான சிவில் வழக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.941/2004 மற்றும் அசல் வழக்கு எண்.351/2004 என்பதாக நிலுவையில் உள்ளது. இந்த சொத்து எனது குடும்பத்திற்குச் சொந்தமான கூட்டுக் குடும்பச் சொத்தாகும். மேற்படி நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு சொத்தில் கதவு எண்.231 என்பதில் L.F.ரோட்டிலுள்ள கடை ஒன்று உள்ளது. இச்சொத்தினை மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள போது திரு. கலியமூர்த்தி என்பவர் கச்சிராயப்பாளையம் கிராமத்தில் வசிக்கும் திரு. இளங்கோ மனைவி திருமதி ப. திலகவதி என்பவருக்கு கடந்த 21.07.2011–ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளார். எனவே, எனது அத்தை முத்தம்மாள் என்பவர் வழக்குரைஞர் மூலம் கடந்த 25.06.2015 தேதியில் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு சொத்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள காரணத்தால் சொத்து வரியை மேற்படி திருமதி திலகவதி பெயருக்கு மாற்றக் கூடாது என சட்ட அறிவிப்பு கொடுத்துள்ளார். ஆனால் மேற்படி L.F.ரோட்டிலுள்ள கதவு எண்.231ல் உள்ள கடையின் சொத்து வரி மேற்படி திருமதி திலகவதி பெயருக்கு மாற்றியுள்ள விவரம் அண்மையில் தெரியவந்தது. சொத்து வரியின் Assessment No.3623 ஆகும். கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் துறையினர் இவ்வழக்கு சொத்து சம்பந்தமாக வழங்கியுள்ள மனை வரி தோராயப் பட்டா மற்றும் கணினி பட்டாவில் என் பெயரும் (வெங்கடேஷ்) என் அத்தை திருமதி முத்தம்மாள் பெயரும் மற்றும் மேற்படி திருமதி திலகவதியின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

ஆனால், வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி திருமதி திலகவதியிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு திருமதி திலகவதி பெயரில் மட்டும் மேற்படி கதவு எண்.231 L.F.ரோட்டில் உள்ள கடைக்கான சொத்து வரியை விதித்துள்ளார். வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கை முற்றிலும் சட்ட விரோதமாகும். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு சொத்தினை மேற்படி திரு. கலியமூர்த்தி வாங்கியது செல்லாது என கள்ளக்குறிச்சி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் I.A.No.1700/2008 in O.S.No.351/2004 என்ற வழக்கில் கடந்த 15.11.2010ல் தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பினையும் மீறி மேற்படி திரு. கலியமூர்த்தி வழக்குச் சொத்திலுள்ள மேற்படி கடையினை சட்டவிரோதமாக திருமதி திலகவதிக்கு கடந்த 2011 ஆம் ஆண்டில் விற்பனை செய்துள்ளார்.

எனவே, மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தார் அவர்கள் தயவு செய்து மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டு சட்டவிரோதமாக மேற்படி கச்சிராயப்பாளையம் L.F.ரோட்டிலுள்ள கதவு எண்.231ல் உள்ள கடைக்கான சொத்துவரியை மேற்படி திருமதி. திலகவதி பெயரில் மட்டும் விதிக்கப்பட்டுள்ளதை ரத்து செய்து சொத்து வரியில் எனது பெயரையும் எனது அத்தை திருமதி. முத்தம்மாள் பெயரையும் சேர்க்க வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும், சட்டவிரோதமாக சொத்து வரியில் திருமதி திலகவதியின் பெயரை சேர்த்த வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தொடர்புடைய ஊழியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், மேலும் நியாயமெனக் கருதும் இன்னபிற உத்தரவுகளை பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராயப்பாளையம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. G. வெங்கடேஷ் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 04.10.2024 நாளிட்ட மனுவினை இம்முறைமன்ற நடுவம் ஆய்வு செய்தது. மனுதாரர் திரு. G. வெங்கடேஷ் என்பவர் தனது புகார் மனுவில் கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட கச்சிராயப்பாளையம் கிராம நத்தம் சர்வே எண்.238/1B ல் L.F.ரோட்டிலுள்ள கதவு எண்.231 கொண்ட கடையானது கூட்டுக் குடும்பச் சொத்து எனவும், இக்கடை சம்பந்தமான சொத்து தொடர்பாக மாண்பமை கள்ளக்குறிச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். O.S.No.941/2004 மற்றும் 351/2004) தொடரப்பட்டு வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். இவ்வாறு, வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள நிலையில், மேற்படி கடையினை திரு. கலியமூர்த்தி என்பவர் முறைகேடாக திருமதி. திலகவதி என்பவருக்கு விற்பனை செய்து உள்ளார். இந்நிலையில், அக்கடையினை திருமதி திலகவதி என்பவரின் பெயரில் சொத்துவரியை வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரால் விதிமீறி நிர்ணயம் செய்துள்ளார் என புகாராக தெரிவித்து, அதனை இரத்து செய்து அச்சொத்தினை தனது பெயருக்கும் மற்றும் தனது அத்தை திருமதி முத்தம்மாள் என்பவரின் பெயருக்கும் மாற்றிட கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சொத்து குறித்து மாண்பமை கள்ளக்குறிச்சி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அவ்வழக்கு நிலுவையில் உள்ளதை மனுதாரரின் மனு மூலம் தெரியவருகிறது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Tami Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxx

(b) Any matter in respecte of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1962 or any matter pending before a Court.

மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள சொத்து குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், மேற்காணும் சட்டப்பிரிவு 10 (3) (b)-ன்படி, இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. G. வெங்கடேஷ்,
எண். 233, L.F. ரோடு, சின்னசேலம் வட்டம்,
கச்சிராயப்பாளையம் – 606 207
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வடக்கனந்தல் பேரூராட்சி,
கச்சிராயப்பாளையம் – 606 207.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர்,
(Nodal Officer) (பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032